RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s13

# இலங்கை மலையகத் தமிழ் நாவல்களில் இனவரைவியல் கூறுகள்

## பெ. சரவணகுமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை-20400, இலங்கை.

# Ethnographical Features in Upcountry Tamil Novels of Sri Lanka

## P. Sarawanakumar [a, *]

[a] Department of Tamil, University of Peradeniya, Peradeniya-20400 Sri Lanka

* Corresponding Author: sarawanan480@gmail.com

Received: 15-02-2021
Revised: 11-09-2021
Accepted: 13-09-2021
Published: 24-01-2022

Check for updates

## ABSTRACT

Upcountry Tamil community in Sri Lanka has unique social, economic and cultural elements. Today, the so-called Upcountry Tamils of Sri Lanka are those who were brought from the rural areas of South India to cultivate cash crops such as coffee, tea and rubber, which were introduced by the British in the 19th century. The literary works about them are the Sri Lankan Upcountry Tamil Literatures. They are also literary copies of the unique cultural treasuries of Upcountry Tamils. This study examines the ethnographic elements found in upcountry Tamil novels. The main objective of this study is to identify the ethnographical elements in Sri Lankan upcountry Tamil novels based on the ethnographic theory of one of the fields of anthropology. The primary sources are novels by non- Upcountry novelists such as Gokilam Subbaiah's Thoorathup Pachai and Buloliyur Ka. Sathasivam's Mooddathinulle. Both the novels are cultural treasures that reveal the social formation, cultural identities, hierarchies, lifestyles, beliefs, rituals, Material cultures, etc. of the Upcountry Tamils. Gokilam Subbaiah and Ka. Sathasivam have documented in they are novels the Traits the ethnographic researcher's observation, participation, and meticulous translation of cultural features. It is these features that may distinguish the Thoorathup Pachai and the novel Mooddathinulle in the upcountry Tamil novels.

**Keywords:** Sri Lanka, Upcountry, Upcountry Tamils, Ethnography, Cultural Treasury.

## முன்னுரை

மனித சமுதாயத்தின் அனுபவ வெளிப்பாட்டைப் புலப்படுத்தும் மொழி வடிவங்களுள் இலக்கியம் பிரதான இடத்தைப் பெறுகின்றது. மாறிவரும் சமுதாய அமைப்பொழுங்கை அது பலவாறு பதிவுசெய்துள்ளது. இலக்கியப் பிரதியின் சமூகப் பயன்பாடும் சமூகப் பெறுமதியும் வளர வளர அது பற்றிய கருத்தமைவுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வந்திருப்பதையும் வருவதையும் அவதானிக்கலாம். குறிப்பாக, இருபதாம் நூற்றாண்டில் சமூக - பண்பாட்டு மானிடவியல் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் இலக்கியப் பிரதிகளின் அணுகுமுறைகளிலும் புதிய ஆய்வுக்களங்களை அறிமுகப்படுத்தின. இலக்கியத்தைப் பண்பாட்டுக் கருவூலமாக நோக்குவதற்கும், பன்முகப்புல அணுகுமுறையில் இலக்கியத்தை ஆராய்வதுக்குமான கோட்பாட்டியலை மானிடவியல் தந்துள்ளது. சமூகப் பண்பாட்டு மானிடவியலில் முக்கியமான கூறாக விளங்கும் இனவரைவியல் இதற்கான ஆய்வுவெளியை அறிமுகஞ் செய்துள்ளது. அவ்வகையில், இந்தக் கட்டுரையானது இனவரைவியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை மலையகத் தமிழ் நாவல்களான கோகிலம் சுப்பையாவின்

தூரத்துப்பச்சை, புலோலியூர் க. சதாசிவத்தின் மூட்டத்தினுள்ளே ஆகிய நாவல்களில் இடம்பெறும் இனவரைவியல் கூறுகளை ஆராய்வதாக அமைகின்றது.

## இனவரைவியலும் இலக்கியமும்

சமூகப் பண்பாட்டு மானிடவியலில் காணப்படும் ஆய்வுப்புலங்களுள் இனவரைவியல் (Ethnography) முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. சமூக - பண்பாட்டு மானிடவியலாளர்களது பிரதான ஆய்வுப்புலமாக இதுவே விளங்குகின்றது. சமூக - பண்பாட்டு மானிடவியலில் காணப்படும் உட்பிரிவுகளில் மிகவும் முக்கியமான ஒரு புலமாக இனவரைவியல் விளங்குகின்றது. மனித சமுதாயத்தின் தோற்றம், வளர்ச்சி, சமூக உறவுகள், இனக் குழுக்களுக்கிடையிலான வேறுபாட்டுக்கான காரணங்கள் என மனித சமுதாயத்தின் அனைத்து அம்சங்களிலும் செல்வாக்குச் செலுத்தும் துறையாக மானிடவியல் விளங்குகின்றது. மானிடவியலில் காணப்படுகின்ற உட்பிரிவுகளுள் ஒன்றான சமூகப் பண்பாட்டு மானிடவியல் கலை, இலக்கியங்களை அறிவியல் நோக்கில் அணுகுவதாகும். சமூகப் பண்பாட்டு மானிடவியலில் காணப்படும் துணைப்புலமாகவே இனவரைவியல் விளங்குகின்றது. மானிடவியலாளர்கள் இனவரைவியல் தொடர்பாகப் பல்வேறு வரைவிலக்கணங்களைத் தந்துள்ளனர்.

> "இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் எனும் பொருளை உணர்த்துகின்றது. ஒரு இனக்குழுவைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகின்றது. ஒரு இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் வகையில் இப்பிரிவை இனக்குழுவியல் என்றும் கூறலாம். இனக்குழுவியல் என்பது ஒரு தனிப்பட்ட சமூகத்தின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்துகொண்டு அவற்றை முறையாகத் தொகுத்து வழங்குதலாகும் "(Bhakthavatsala Bharathi, 2018).

> "குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினரின் சமூக - பண்பாட்டு வாழ்க்கைமுறையை ஒருவகைத் திட்டவட்டமான முனைப்புடன் களப்பணியின் மூலம் உற்றுநோக்கித் திரட்டும் தரவுகளைக் கொண்டு ஓர் ஆய்வாளன் படைக்கும் பண்பாட்டுச் சித்திரிப்பாக அமையும் ஒரு தனி வரைவுநூலே இனவரைவியல்" (Dhananjayan, 2014).

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணங்களின் அடிப்படையில் நோக்கும்போது, இனவரைவியல் என்பது, குறிப்பிட்ட மக்களையும் பண்பாட்டையும் அறிவியல் நிலைநின்று ஆய்வுக் குட்படுத்துவதும், ஒரு பண்பாட்டின் செய்திகளைத் தொகுத்துத் தருவதுமாகும். மக்களைப் பற்றியும், அவர்களது வாழ்வியல் முறைகள் பற்றியும், வாழ்வியல் முறைகளுக்கு ஆதாரமாக அமைகின்ற சமூக வழமைகள் பற்றியும், அந்தச் சமூக வழமைகளுக்கு அடிக்கட்டுமானமாகத் திகழும் பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும் கவனத்திற்கொள்கின்ற ஒரு சமூக - பண்பாட்டு அறிவியல் புலமாகும். அது சமுதாயத்தின் செயற்பாடுகளையும் சமூக அமைப்பொழுங்கையும் அறிவியல் நோக்கில் களப்பணியினுடாகக் கட்டமைக்கும் ஒரு துறையாகவும் விளங்குகின்றது எனலாம்.

## நாவல் இலக்கியமும் இனவரைவியல் கூறுகளும்

நாவலைப் பண்பாட்டு ஆவணங்களுள் ஒன்றாக ஆராய்வதற்கான பொருட்பரப்பை அது கொண்டுள்ளது. நவீன இலக்கிய வடிவங்களுள் நாவல் இலக்கியம், இனவரைவியல் ஆய்வுக்குரிய பல தரவுகளைக் கொண்டிருக்கின்றது. அதற்கான அடிப்படைக் காரணம் நாவலிலக்கியத்தின் படைப்புவெளியே எனலாம். மனித வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளையும் வெளிப்படுத்துவதற்கான வாயிலாக அது அமைந்து விடுகின்றது. பிறிதொரு வகையில் கூறுவதானால், நாவல் இலக்கியத்துக்குப் புறம்பான வாழ்க்கை அனுபவம் இல்லை என்றும் சொல்லும் அளவுக்கு மனித வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. ஏனைய இலக்கிய வடிவங்களுக்கு இல்லாத ஒரு சிறப்புக்கூறு இது எனலாம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தை அல்லது பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறும் நாவல், அந்தச் சமுதாயத்தின் உற்பத்தி நடவடிக்கைகளையும், அதிகாரப் படிநிலைகளையும், பண்பாட்டுப் பொருண்மைகளையும், மொழிப் பயன்பாட்டையும் வெளிப்படுத்துவதாக அமைவது

முக்கியமானதாகும். அவ்வாறு அமையும் நாவலானது, குறிப்பிட்ட சமுதாயத்தினது இனவரைவியல் கூறுகளை ஆராய்வதற்கான பண்பாட்டுக் கருவூலமாக மேற்கிளம்பி விடுகின்றது. உண்மை அல்லது யதார்த்தம் என்பதற்கும் புனைவு என்பதற்கும் இடைப்பட்ட எல்லை அல்லது இடைவெளி என்பது எவ்வளவிற்கு எவ்வளவு குறைகிறதோ அல்லது மறைகிறதோ அந்த அளவிற்கு அக்குறிப்பிட்ட இலக்கியப் படைப்பில் இனவைவரைவியல் தன்மை வியாபகம் கொண்டு விடுகிறது என்பதுதான் (Dhananjayan, 2015).

இனவரைவியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, ஒரு சமுதாயத்தை அல்லது இலக்கியத்தை ஆராய முற்படும்போது, மேல்வரும் இனவரைவியல் கூறுகளைக் கவனத்திற் கொள்ளவேண்டும் வேண்டும் என்பர் (Bhakthavatsala Bharathi, 2014). நில அமைப்பு, சுற்றுச்சூழல், காலநிலை, பருவ காலங்கள், தாவரங்கள் விலங்குகள், குடியிருப்பு முறை, குடும்ப அமைப்பு, திருமணமுறை, வாழ்க்கை வட்டச் சடங்குகள், வாழ்க்கைப் பொருளாதாரம், தொழிற்பகுப்பு, உற்பத்திமுறைகள், அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடுகள், சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், வாய்மொழி வழக்காறுகள், புழங்குபொருள் பண்பாடு, உளவியற் பாங்குகள், ஆடை அணிகலங்கள், உணவுமுறைகள் முதலானவை குறிப்பிட்ட சமுதாயத்தின் இனவரைவியல் தகவல்களைத் தரும் வாயில்களாக அமைந்திருக்கின்றன. நாவல்களில் இடம்பெறும் இந்த இனவரைவியல் கூறுகள் குறிப்பிட்ட நாவலில் நடமாடும் பாத்திரங்களின் உண்மைத் தன்மைகளையும், பிரச்சினைகளையும் புலப்படுத்துவனவாகவும் அமைந்துவிடுகின்றன.

## தூரத்துப்பச்சை, மூட்டத்தினுள்ளே நாவல்களில் இனவரைவியல் கூறுகள்

இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் மலையகத் தமிழ் இலக்கியம் என்பது ஓர் இனத்துவ அடையாள இலக்கியமாக விளங்குகின்றது. அவ்வாறு அமைவுபெறுவதற்கு அது தனக்கென தனித்துவமான சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வியல் பொருண்மைகளைக் கொண்டிருக்கின்றமை முக்கியமான காரணமாகும். மலையக இலக்கியப் பரப்பைப் பொறுத்தமட்டில், ஏனைய கலை இலக்கிய வடிவங்களைவிட புனைகதை இலக்கிய வடிவங்கள் செழுமையான இடத்தைப் பெற்றிருக்கின்றன. பெருந்தோட்ட மக்களின் சமூக வரலாற்றைப் படம்பிடித்துக் காட்டுவனவாகவும் திகழ்கின்றன. பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் கோலங்களையும், அவர்களின் சமூக அசைவியக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன. அவற்றுள், கோகிலம் சுப்பையாவின் தூரத்தப்பச்சை, புலோலியூர் க. சதாசிவத்தின் மூட்டத்தினுள்ளே ஆகிய நாவல்கள் உள்ளடக்கப் பொருண்மையிலும் வெளிப்பாட்டு முறைமையிலும் தனித்துவமான இடத்தைப் பெறுகின்றன.

கோகிலம் சுப்பையாவின் தூரத்துப்பச்சை நாவல் 1964 ஆம் ஆண்டு வெளிவந்தது. இதன் இரண்டாம் பதிப்பைத் தமிழ்ப் புத்தகாலயம் 2002 ஆம் ஆண்டு வெளியிட்டது. இந்தியாவில் பிறந்த கோகிலம் சுப்பையா, பதுளையைச் சேர்ந்த எஸ். எம். சுப்பையாவைத் திருமணம் முடித்தார். திருமணத்துக்குப் பின்னர் மலையக மக்களோடும், பண்பாட்டோடும், அரசியலோடும் தன்னை இணைத்துக்கொண்டார். 1958 இல் இலங்கை இனமுறுவலில் இந்தியாவுக்குச் சென்ற கோகிலம் சுப்பையா, செக்கோஸ்லொக்கியா தமிழறிஞர் கமல் சுவலபலவுடன் ஏற்பட்ட தொடர்பின் தூண்டுதலால் இந்த நாவலை எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார். வேரெந்தப் படைப்பும் வந்திருப்பதாக அறிய கிடைக்கவில்லை எனச் சாரல்நாடன் கூறுகின்றார் (Saralnadan, 2000). கோகிலம் சுப்பையா தூரத்துப்பச்சை நாவலை Mirage என்ற தலைப்பில் அவரே மொழிபெயர்த்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மூட்டத்தினுள்ளே நாவலின் ஆசிரியர் புலோலியூர் சதாசிவம் (1942 - 2004) யாழ்ப்பாணத்திலுள்ள புற்றளை என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். தொழில் நிமித்தம் மலையகத்தில் முப்பது ஆண்டுகளுக்கு மேல் வைத்தியராகப் பணியாற்றியவர். இவரது புனைகதைகள் யாழ்ப்பாணத்தையும், மலையகத்தையும் பின்புலமாகக் கொண்டவை. நீண்ட காலம் மலையகத்தில் வாழ்ந்தமையாலும், தொழில்முறைமையால் மக்களோடு நெருங்கிப் பழகியமையாலும் மலையகத்தைக் களமாகக் கொண்டு நாவல், சிறுகதைகளை எழுதியுள்ளார். யுகப் பிரவேசம் (1973), ஒரு நாட்பேர் (1995), புதிய பரிமாணம் (1998), அக்கா ஏன் அழுகிறாய் முதலான சிறுகதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

தூரத்துப்பச்சை, மூட்டத்தினுள்ளே ஆகிய நாவல்களில் இடம்பெறும் இனவரைவியல் கூறுகளை இடப்பெயர்வும் பெருந்தோட்டச் சமூக உருவாக்கமும், புவியியல் சூழலும் தொழில் பகுப்புமுறையும், சமூக வகுப்புமுறையும், சாதியக் கட்டமைப்பும், சமூக யதார்த்தமும் பாத்திர உருவாக்கமும், வழிபாட்டு முறைகளும் நம்பிக்கைகளும், குறிகேட்டலும் பேயோட்டு சடங்குமுறையும் முதலான தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கலாம்.

## இடப்பெயர்வும் பெருந்தோட்டச் சமூக உருவாக்கம் குறித்த பதிவுகளும்

19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலக் காலனித்துவ காலப்பகுதியில் மலையகத் தமிழர் தென்னிந்தியக் கிராமப் பகுதிகளிலிருந்து வெவ்வேறு வகையான ஒப்பந்தமுறைகளின் அடிப்படையில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர். ஒப்பந்தமுறை, கங்காணி முறை, துண்டுமுறை முதலான ஒப்பந்த உபாயங்களைக் கையாண்டனர். இதில் கங்காணி முறையே பெரிதும் முக்கியமான உபாயமானது. 'பத்தென்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கங்காணிமுறை ஒரு முழுமையான ஆள் திரட்டும் முறையாக வளர்ச்சியுற்றிருந்தது (Santhirasegaran, 1989). கோப்பிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியிலும், தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிகளிலும் தென்னிந்தியக் கிராம மக்கள் அழைத்துவரப்பட்டனர். தேயிலைப் பயிர்ச்செய்கை இடம்பெற்ற காலப்பகுதியிலேயே பெருந்தொகையான தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டனர். ஆங்கிலேயர் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கை மலையகப் பிரதேசங்களுக்குச் சென்ற மக்கள், பெரும் மலைகளையும் காடுகளையும் வளம் நிறைந்த நிலங்களாக்கி புதிய சமூக பண்பாட்டு உருவாக்கத்தை அமைத்துக்கொள்ள எவ்வாறெல்லாம் போராட வேண்டியிருந்தது என்பதை விவரிப்பதாக கோகிலம் சுப்பையாவின் தூரத்துப்பச்சை நாவல் விளங்குகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்திய கிராமப்பகுதிகளில் நிலவிய பஞ்சம், பஞ்சத்தினாலும் நோய்களினாலும் மடிந்த வரலாறு, கங்காணிமார்களின் ஆள் திரட்டும் உத்திகள், உழைப்புக்காக உறவுகளை சொந்த கிராமங்களிலேயே விட்டுவிட்டு, கடல்கடந்து வரும் சோகம் என விரியும் தூரத்துப்பச்சை நாவல் மலையகத் தமிழர்களின் சமூக வரலாற்று ஆவணமாகத் திகழ்கின்றது. சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

> 'இராமனாதபுரம் ஜில்லாவில் ஒரு வருடத்திற்கு மழையில்லாவிட்டாலே பஞ்சம்தான். அதுவும் மூன்று வருடத்திற்கு மழையில்லை என்றால் சொல்ல வேண்டுமா? இதனால் சேத்தூர் கிராமத்திலுள்ள குளம் வற்றி எத்தனையோ காலமாகிவிட்டது. அந்தக் குளத்திலிருந்த மீன்களைப் பிடித்துச் சாப்பிட்டும் எத்தனையோ காலமாகிவிட்டது. இப்பொழுது மருத்துக்குக் கூட ஒரு மீன் கிடைப்பதே இல்லை. போதாக்குறைக்குக் குடி தண்ணீர் இறைக்கும் கிணறுகூட வற்றி வரண்டு போய்விட்டது. 'காலத்தின் கொடுமையோ? எங்கள் ஊருக்கு வந்த சாபக்கேடோ, தெரியவில்லை. என்று ஊர் மக்கள் சலித்துக் கொண்டார்கள். பொன்னிரமான நெற்கதிர்கள் குலுங்கியதற்குப் பதிலாக வயல்களிலே பாளம் பாளமாக வெடித்துக் காய்ந்த பிளவுகள் காணப்பட்டன. அறுவடை செய்த நெற்கதிர்களின் அடித்தாள்கள், முள்ளைப்போல் குத்திட்டு நின்றுகொண்டிருந்தது. அதில் நடந்து போவோரின் பாதங்களில் அவை பாய்ந்து இரத்தம் கசியச் செய்தன. ஆனால் அவர்களில் பலருக்கு உடம்பில் இரத்தமே இருந்தால்தானே? (Gokilam Subbaiah, 2002).

என சேத்தூர், கிராமத்தின் வறட்சியும் அதனால் ஏற்பட்ட பஞ்சமும், கிராமமக்கள் புலம்பெயர்வுக்கான காரணங்களும் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. தென்னிந்தியாவில் தாது வருட பஞ்சமே பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்வதற்கும் கிட்டத்தட்ட 40 இலட்சம் மக்கள் இறப்பதற்கும் காரணமாக அமைந்தது (Sivasubramaniyan, 2014).

19 ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியக் கிராமப்புறங்களிலிருந்து கடல்மார்க்கமாக இலங்கைக்குக் கொண்டுச் செல்லப்பட்ட மக்கள், மண்டபம் முகாம்களில் எதிர்நோக்கிய அவலங்கள், தொற்றுநோய்த் தடுப்பு முகாம்கள் என்ற பெயரில் நிகழ்த்தப்பட்ட அடக்கு முறைகள், நெஞ்சில் சூடு போடுதல் முதலானவற்றை மலையகத் தமிழ் நாவல்கள் பதிவுசெய்துள்ளன. மேலும், படகுகளில் அதிக

எண்ணிக்கையிலான மக்களை ஏற்றிச் சென்றபோது, படகு கவிழ்ந்த வரலாறு என்பன மலையக மக்களின் சமூக வரலாற்றில் துயரமிக்கவையே. இவ்வகையில், கோகிலம் சுப்பையாவின் தூரத்துப்பச்சை நாவலில் இடம்பெறும் மேல்வரும் பகுதி மிகுந்த கவனத்துக்குரியது எனலாம்:

> "கப்பலிலுள்ளவர்களின் கதி என்னவாயிருக்க முடியும்? உப்புக் கசிந்த கடல்தண்ணீரின் வாடையினாலும், நாற்றத்தினாலும், குழந்தைகள், தாய்மார்கள், மற்றும் பலர் வாந்தி எடுத்து மலஜலமும் கப்பலுக்குள்ளேயே போக வேண்டிய நிலை ஏற்பட்டது. சாப்பாடு, தண்ணீர் ஒன்றுமில்லாமல் மழையில் நனைந்து வெயிலில் உலர்ந்து, மயங்கிக் கிறங்கி உயிரற்ற சடலங்களாக அக்கரை போய் சேர்ந்தார்கள். அந்தக் கப்பலுக்குள் நடந்த விபத்துக்கள் எத்தனையோ! ஒரு குழந்தை தலையை நீட்டி எட்டிப் பார்த்ததன் பலன் அந்தப் பெரிய சமுத்திரத்துக்கே இரையாயிற்று. பட்டினியால் வாடி வருந்தி வந்தவர்களில் ஒருவன், கப்பலில் வாந்தியும் வயிற்றோட்டமும் கண்டு அங்கேயே உயிர் துறந்தான். அவனுடைய சடலத்தையும் சமுத்திரராஜாவுக்கே அர்ப்பணம் செய்தார்கள்" (தூரத்துப்பச்சை, ப. 54 - 55).

தூரத்துப்பச்சை நாவலில் நடமாடும் மனிதர்கள் சேத்தூர் கிராமத்திலிருந்து இலங்கை மத்திய மலைப் பிரதேசங்களை அடையும் வரை எதிர்நோக்கிய பிரயாணநிலை பிரச்சினைகள் சமூக வரலாற்றுச் சித்திரிப்பாக விரிகின்றமையும் மனங்கொள்ளத்தக்கது.

## புவியியல் சூழலும் தொழிற் பகுப்பு முறையும்

ஒரு பண்பாட்டின் இனவரைவியல் கூறுகளுள் பொருளாதார உற்பத்தி உறவுகளுக்கு முக்கியமான இடம் உண்டு. புவியியல் சூழலே மக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அடிப்படையாகும். பண்பாட்டின் ஏனைய அனைத்துப் பண்பாட்டுப் பொருண்மைகளையும் கட்டமைக்கும் அத்திபாரமாகவும் பொருளாதார நடவடிக்கைகளே அமைகின்றன. மலையக மக்கள் மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணங்களிலும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் கணிசமானவர்கள் வாழ்ந்து வருகின்றனர். மலையகத்தைப் பொருத்தமட்டில், ஆங்கிலேயர் உருவாக்கிய கோப்பி, தேயிலை, ரப்பர் முதலான பணப்பயிர்ச்செய்கையே பொருளாதார நடவடிக்கைகளாக அமைந்தன. தென்னிந்தியப் பண்பாட்டுச் சூழலில் விவசாயத்தையே தமது வாழ்வாதாரமாகக் கொண்ட சமூகம், மலையகத்தில் புதிய பொருளாதாரக் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டது. புதிய பொருளாதார நடவடிக்கையும், அதனது தொழில்சார்ந்த கட்டமைப்புகளும் அறிமுகமாயின. ஆண்களுக்குரிய தொழில்கள், பெண்களுக்குரிய தொழிகள் என வகுக்கப்பட்டிருந்தது. பெண்களுக்குரிய தொழில்களாக கோப்பிப்பழம் பறித்தல், புல் வெட்டுதல், கொழுந்து பறித்தல், மட்டம் வெட்டுதல் ஆகியனவும், ஆண்களுக்குரிய தொழில்களாக காடுகளை அழித்தல், கன்றுகளை நடுதல், மட்டமடிப்பு, காவல் செய்தல், முருங்கை வெட்டுதல், உரம் போடுதல், கவ்வாத்து வெட்டுதல், மருந்தடித்தல், கூனி அடித்தல், குழிகுத்துதல், பட்டை உரித்தல், மீனாப்புல் நடுதல், முள்ளு குத்துதல் முதலானவைகளுமாக இருக்கின்றன. இத்தொழில் முறைகள் குறித்தும் அதனது தனித்துவமான செய்முறை நுட்பங்கள் குறித்தும் தூரத்துப்பச்சை, மூட்டத்தினுள்ளே நாவல்கள் மிக விரிவாக எடுத்துரைக்கின்றன.

ஒவ்வொரு தொழில் முறைக்குள்ளும் இடம்பெறுகின்ற அடக்குமுறைகள், தொழிலாளர் எதிர்கொள்ளும் சவால்கள், அதிகார வர்க்கத்துக்கெதிராகப் போராடுபவர்கள் பலிவாங்கப்படும் விதம் என பலவாறான அம்சங்களை இந்நாவல்கள் பதிவுசெய்கின்றன. குறிப்பாக, பெண்கள் தொழில்களத்தில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொழில் கட்டமைப்புக்குள் நிகழும் அடக்குமுறைகள் குறித்த வெட்டுமுகத் தோற்றத்தை இவ்விரு நாவல்களும் தருகின்றன.

## சமூக வகுப்பு முறையும் சாதிய அடுக்கமைவும்

சமூக அமைப்பு முறையும் சாதிய அடுக்கமைவும் தமிழ்ச் சமூகத்தில் புராதன காலத்திலிருந்தே இருந்து வருகின்றன. தமிழ்ப் பண்பாட்டினது பன்முகத் தன்மையைக் காட்டுவதாகவும் இவைகள் காணப்படுகின்றன. மலையகத்தைப் பொறுத்தவகையில், காலனித்துவ காலத்தில்

அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரப் பயிர்ச்செய்கை புதிய சமூக வகுப்பொன்றையும் தோற்றுவித்துள்ளது. மலையகத்தில் அதிகாரம், பொருளாதாரம், தொழில்முறைமை என்பவற்றை முன்னிறுத்தி வகுக்கப்பட்டிருக்கின்ற சமூக வகுப்பு முறையொன்று உருவாகியுள்ளதைக் காணலாம். இது குறித்த தகவல்களையும் நாவல்கள் வெளிப்படுத்துகின்றன.

மேலும், நிலமானிய சமூக அமைப்பின் குணாதியங்களில் ஒன்றான சாதிய முறைமை மலையகத் தமிழரிடமும் காணப்படுகின்றது. தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தவர்களுள் பெரும்பாலானவர்கள் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். ஆங்கிலக் காலனித்துவம் தமிழர் பண்பாட்டில் இறுக்கமாக இருந்த சாதிய முறைமைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது. தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை அழைத்து வருவதற்கான முகவர்களாக இருந்த கங்காணிகள் உயர்சாதிகளைச் சேர்ந்தவர்களாகவே காணப்பட்டனர். "குடியகன்றவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் தீண்டத்தகாத வகுப்புகளையும் ஆதிதிராவிட வகுப்பினையும் சேர்ந்தவர்களாக இருந்தனர் என்று தெரிவிக்கின்றது. எஞ்சியவர்கள் வேளாளர், கௌண்டர், அம்பலக்காரர், கள்ளர் ஆகிய சமூக வகுப்புகளைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். தீண்டத்தகாத வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் நிலமற்ற தொழிலாளர்களாகவோ அல்லது அடிமை போன்று வாழ்ந்தவர்களாகவே காணப்பட்டனர். தீண்டத்ததாக வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் நிலமற்ற தொழிலார்களாகவோ அல்லது அடிமை போன்று வாழ்ந்தவர்களாகவே காணப்பட்டனர். எனவே, அவர்கள் பெருந்தொகையினராகக் குடியகலத் தீர்மானித்ததில் வியப்பில்லை. எனினும், நில உடமையாளர்களும் "உயர்ந்த" சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தவர்களும் குடியகன்றமை குறிப்பிடத்தக்கது" (Santhirasegaran, 1989).

தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள் சாதி அடிப்படையில் லயன்களில் குடியமர்த்தப்பட்டமையும், தொழில் நிலைகளிலும், சமூக நிகழ்வுகளிலும் சாதிய முறைகள் பின்பற்றப்பட்டமையாலும் சாதிய முறைமை மலையகத்தில் இறுக்கநிலை அடையத் தொடங்கிற்று. மலையகத்தில் தோற்றம் பெற்ற நாவல்கள் இந்தச் சாதிய அமைப்பு முறையையும், அதனால் ஏற்பட்ட சமூகப் பிரச்சினைகளையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. உதாரணமாக:

> 'நம்ம சாதியில இப்பிடி மாப்புள கெடய்க்கிறது கஷ்டந்தான் கங்காணி. அவுங்களுக்கு பணம் கேக்குறது, காரொன்னு வாங்கத்தான்' (Sathasivam, 1983).

> 'ஜாதி இல்லேங்கிறத நா ஒத்துக்க மாட்டேன் தம்பி, கீழ் ஜாதிக்காரன் ஒறவும் போயிலைக்காம்பு ஓரமும் செவத்தில ஒட்டின சுண்ணாம்பும் சரிங்குறது சரியான பேச்சு' (Santhirasegaran, 1989).

என மூட்டத்தினுள்ளே நாவலாசிரியர் பதிவுசெய்கின்றார். எனினும், மலையகத்தில் இடம்பெற்ற இனவன்முறையின் காரணமாகவும், ஸ்ரீமாசாஸ்திரி ஒப்பந்தம் காரணமாகவும் இடம் பெயர்ந்தவர்களுள் பலர் உயர்சாதி வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தமையாலும், பெருந்தோட்டத் தொழில்முறை எல்லா சாதியினருக்கும் ஒரே தன்மையினதாக விளங்கியமையாலும் சாதிய அமைப்பு முறையில் தளர்வுகள் ஏற்படலாயிற்று. இது குறித்தும் நாவலாசிரியர்கள் தமது படைப்புகளில் எடுத்துரைக்கின்றனர். உதாரணமாக மேல்வரும் பகுதியைச் சுட்டிக்காட்டலாம்.

> 'சிலோன் இனி சரிவராது. வெள்ளைக்காரனோட எல்லாம் போயிரிச்சி. நாம ஈந்தியாவுக்குப் போறதுதான் நல்லது. நா ஈந்தியாவுக்குப் போவ எழுதியிருக்கேன். இவுங்க மடையனாப் போனாங்க. நம்ம ஜாதிக்காரங்க எல்லாம் போய்ச் சோர்ந்துட்டாங்க பாரு தம்பி எங்க தோட்டத்து தலைவரா வந்திருக்க பயலோட அப்பன் வாசல்கூட்டி வேல செஞ்சான். காலமும் மாறிப் போச்சு. நாம ஒதுங்குறதுதான் நல்லது'.

என மூட்டத்தினுள்ளே நாவல் வெளிப்படுத்துகின்றது. ஆரம்ப காலப்பகுதியில் கங்காணிகள், தோட்டத் தலைவர்மார்களின் தெரிவுகள் எல்லாமே உயர்சாதிக்காரர்களாக இருந்தனர். பிற்பட்ட காலப்பகுதிகளில் தாழ்த்தப்பட்ட சாதியிலிருந்து கங்காணிகள், தோட்டத்தலைவர்கள் தெரிவுசெய்யப்பட்டமை சாதிய அமைப்புமுறைக்குள் ஏற்பட்ட முக்கியமான மாற்றமெனலாம்.

மூட்டத்தினுள்ளே நாவலாசிரியர் மலையகத்தில் இயங்குநிலையில் காணப்பட்ட சாதியப் பாகுபாட்டைப் பாத்திரங்களின் உரையாடல்கள் மூலமாகவே பதிவுசெய்துள்ளமை மனங் கொள்ளத்தக்கது.

## சமூக யதார்த்தமும் பாத்திர உருவாக்கமும்

ஓர் இலக்கியப் படைப்பாளியை இனவரைவியலராகக் காட்டுவதில் முக்கியமான பங்கு வகிப்பது அவனது படைப்புகளில் நடமாடும் பாத்திரங்களின் சித்திரிப்புகளாகும். ஓர் இலக்கியப் படைப்பு சிறந்து விளங்க வேண்டுமானால் அதில் இடம்பெறும் மாந்தர்களும், அம்மாந்தர்களின் பின்புலத்திலுள்ள சகல இயக்கங்களும் உரிய பொருட்களும் நுணுக்கமாகச் சித்திரிக்கப்பட வேண்டும். இதற்கு உறுதுணையாக அமைவது அவ்விலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளியின் இனவரைவியல் அறிவாகும். இலக்கியத்தில் இடம்பெறும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைப் பற்றிய இனவரைவியல் செய்திகள் அவ்விலக்கியத்தில் இடம்பெறும் பாத்திரங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் பொருத்தமான பின்புலத்தை உருவாக்க உதவுகின்றன (Sivasubramaniyan, 2014). மேலும், பாத்திரங்களுக்கிடையே இடம்பெறும் உரையாடல்களும் பாத்திரங்கள் குறித்த விவரிப்புக்களும் இனவரைவியல் நாவல்களில் முதன்மை பெறுகின்றன. தூரத்துப்பச்சை, மூட்டத்தினுள்ளே ஆகிய நாவல்களில் இந்த அம்சங்கள் சிறப்பாக அமைந்துள்ளன.

இந்நாவல்களில் உலாவும் கதைமாந்தர்கள் பற்றிய நாவலாசிரியர்களின் சித்திரிப்புக்கள் அவரவரின் சமூகநிலைகளைக் காட்டிவிடுகின்றன. கோகிலம் சுப்பையாவின் தூரத்துப்பச்சை நாவல் ஒரு நூற்றாண்டு கால வரலாற்றை எடுத்துரைக்கின்றது. இந்த ஒரு நூற்றாண்டு காலப் பகுதிக்குள் இடம்பெற்ற தலைமுறைகளுக்கிடையிலான பல வேறுபாடுகளையும் நாவல் பதிவுசெய்கின்றது. நாவலின் ஆரம்பத்தில் வரும் வேலன், செல்லாத்தாள், முத்தம்மாள் முதலான பாத்திரங்களின் சித்திரிப்பும் செயற்பாடும் பழைய தலைமுறையின் குணாதிசயங்களைக் காட்டுவன. நாவலில் நான்காவது தலைமுறையைச் சேர்ந்தவர்களான முருகன், மாரிமுத்து, லட்சுமணன், மருதை முதலான பாத்திரங்கள் நவீனத்துவச் சிந்தனைகளை விரும்புகின்ற, புதிய சமூக ஒழுங்கை அவாவி நிற்கின்ற பாத்திரங்களாக விளங்குகின்றன. மேலும் இந்நாவலில் இடம்பெறும் பெண் பாத்திரங்கள் இருவேறுபட்ட உளவியல் நிலைகளிலிருந்து சித்திரிக்கப்பட்டுள்ளன. 1. தோட்ட அதிகாரிகளின் அடக்குமுறைக்குள் சிக்கித் தவிக்கும் பெண் பாத்திரங்கள் (உதாரணமாக சிவகாமி, காவேரி முதலான பாத்திரங்கள்). 2. அதிகாரிகளின் அடக்குமுறைகளுக்கெதிராகக் குரலெழுப்பும் பெண் பாத்திரங்களாகவும் (உதாரணமாக முத்தம்மாள், வள்ளி முதலான பாத்திரங்கள்) விளங்குகின்றார்கள். அதுபோலவே, மூட்டத்தினுள்ளே நாவலில் வருகின்ற பெருமாள், அஞ்சலை, செல்லாயி, மாரிமுத்து, மலையாண்டி, வேலுச்சாமி, பூவாயி முதலான பாத்திரங்கள் குறிப்பிடத்தக்கன. பெருமாள், பூவாயி, பூவலிங்கம் பூசாரி முதலான பாத்திரங்கள் மலையகத்தின் வெவ்வேறான சமூக உளவியல்நிலை பாத்திரங்களாக வார்க்கப்பட்டுள்ளன எனலாம்.

## வழிபாட்டு முறைகளும் சடங்குமுறைகளும்

ஒரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலிக்கும் கூறுகளுள் சமயம், வழிபாட்டு முறைகள் என்பனவும் அடங்குகின்றன. குறிப்பிட்ட சமுதாயத்தின் சமூக உளவியல் நிலைகளைக் கட்டமைப்பதாகவும் இவைகள் அமைந்துவிடுகின்றன. பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் சமயம், வழிபாட்டு முறைகளை பொதுநிலை சார்ந்த வழிபாடுகள், தொழில் நிலை சார்ந்த வழிபாடுகள், குலதெய்வ வழிபாட்டு முறைகள் என்ற வகையில் நோக்கலாம். பொதுநிலை வழிபாடு ஒரு தோட்டத்திலுள்ள அனைத்து மக்களும் சேர்ந்து வழிபடும் வழிபாட்டு முறையாகும். அவ்வகையில் மாரியம்மன் வழிபாடு பொதுநிலை சார்ந்த வழிபாடாகக் காணப்படுகின்றது. ஆரம்ப காலப்பகுதியில் பூசாரியால் நடத்தப்பட்டது. பிற்பட்ட காலப்பகுதிகளில் பிராமணர்களுடைய செல்வாக்கும், கோயில்களின் அமைப்பு முறையிலும் கிரியை முறைகளிலும் ஏற்பட்ட மேல்நிலையாக்கச் சிந்தனைகள் பூசாரிகளின் செல்வாக்கை குறைத்தது. தூரத்துப்பச்சை நாவலில் இடம்பெறும் மாரியம்மன் வழிபாடு பற்றிய சித்திரிப்பு மிக முக்கியமானது.

குலதெய்வ வழிபாடு என்பது இயற்கையாலன்றி பல்வேறு சமூகப் பொருளாதார, அரசியல், கலாச்சாரக் காரணங்களால் திடீரென்று இறந்தவரை (தற்கொலை, போர், கொலை, விபத்து போன்றவற்றால் இறந்தவரை) தெய்வமாக வழிபடுவது குலதெய்வ வழிபாடு என்று அழைக்கின்றனர் (Maatku, 2001). மலையகத்திலும் குலதெய்வ வழிபாடு மிக முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றது. தென்னிந்தியக் கிராமப்புறங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட வழிபாட்டு முறையாவும் இது விளங்குகின்றது. குலதெய்வ வழிபாட்டில் முனியாண்டி, கருப்பசாமி, மாடசாமி, மதுரைவீரன் முதலான தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. குலதெய்வ வழிபாட்டில் பலியிடுதல் முக்கிய இடம் பெற்றிருந்தது. கோழி, ஆடு முதலானவற்றைப் பலியிடும் வழக்கம் காணப்படுகின்றது. மலையகத்தில் வழிபடப்படுகின்ற குலதெய்வ வழிபாட்டு முறைகளையும் நாவலாசிரியர்கள் பதிவுசெய்துள்ளனர்.

> 'அதன் அடர்ந்து வளர்ந்த தலைமயிரை அழகாகச் சீவிக் குடுமி வைத்திருந்தான். அதில் சில நரைமயிர்கள் கலந்திருந்தமையால், அவை வெள்ளிக் கம்பியைப்போல் மினு மினுத்தன. அவனது கரியநிற முகம், அவளுக்கு சேத்தூர் கிராமத்தில் அவர்கள் கும்பிடும் முனியாண்டித் தெய்வத்தின் உருவத்தை நினைவூட்டியது" (Gokilam Subbaiah, 2002).

> "போயும் போயும் நேத்துத்தான் நீ ஒரு ஆட்டுக்குட்டி வேற கொண்டாந்த. என்னமோ நம்ப கருப்புக்கு நேந்துக்க. அந்த ஆட்டே வளத்து உட்டுப்புடுறேனு வேண்டிக்க. ஏதாச்சும் முடிஞ்சு கிடுஞ்சு போடு. நம்ப முனியன்தான் காப்பாத்தனும்".

> "அந்த முனியன்தான் கேக்கணும். யார் என் ஆட்டே புடிச்சிக்கிட்டுப் போனாங்களோ அவங்களே அந்த முனியனே கேட்டுப்புடுவான். ஆமாம் அவனுக்கு நேந்த ஆடதான்".

பெருந்தோட்ட உற்பத்தி முறைகளினுடாக மேற்கிளம்பிய வழிபாட்டு முறைகளாக கவ்வாத்துசாமி வழிபாடு, கொழுந்துசாமி வழிபாடு, றோதைமுனி வழிபாடு, தவறணைமுனி வழிபாடு, மட்டத்துசாமி வழிபாடு முதலான வழிபாடுகள் தொழில்முறை சார்ந்த வழிபாடுகளாக விளங்குகின்றன. இவை ஆண் தொழிலாளர்களுக்குரிய வழிபாடுகளாகவும் பெண் தொழிலாளர்களுக்குரிய வழிபாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மலையக நாவல்களில் இவ்வழிபாடுகள் குறித்த விரிவான பதிவுகளைக் காணலாம்.

## குறிகேட்டலும் பேயோட்டும் சடங்குமுறையும்

ஒரு சமூகத்தின் பண்பாட்டுப் பொருண்மைகளில் நம்பிக்கைகளும் சடங்குமுறைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. அவற்றுள் குறிகேட்டலும் நம்பிக்கையும் பழங்காலத்திலிருந்தே இருந்துவருகின்றன. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த ஆதிமனிதன் இயற்கையின் நிகழ்வுகளுக்கு வெவ்வேறான வகைகளில் கருத்துருவங்களை அமைத்துக் கொண்டான். அந்தக் கருத்துருவங்களுக்கு சடங்கியல் முறைகளையும் உருவாக்கிக் கொண்டான். அவற்றுள் குறிகேட்டல் வழக்கமும் ஒன்றாகும். தமிழர் பண்பாட்டில் குறிகேட்டலும் அதன் நிமித்தம் நடக்கும் சடங்குமுறைகளும் சங்கப் பண்பாட்டிலிருந்தே இருந்துவருகின்றது. நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் இவ்வகைச் சடங்கு முறைகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. "குறிகேட்டல் என்ற சடங்கு, இன்றைய சிறுதெய்வ வழிபாட்டில் பேரிடம் பெறுகின்றது. தெய்வம் நேரில் தோன்றும் என்றும் கூறப்பெறும் சமயநம்பிக்கை, சிறுதெய்வ வழிபாட்டில் மக்கள் ஒன்றிப்போவதற்கு வழிவகுத்தது; இந்நம்பிக்கை ஆழ வளர்வதற்கு அமைந்த கருவிகளுள் ஒன்றே குறிகேட்டலாகும் (Selvarasu, 2020). மலையகப் பண்பாட்டிலும் குறிகேட்டலும் அதன் நிமித்தம் நடைபெறும் சடங்குகளும் இடம்பெற்றுவருகின்றன. மக்கள் தங்களுக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் குறிகேட்டல் சடங்குமுறையினூடாகப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறார்கள். குறிப்பாக, காத்து கருப்பு அண்டுதல், செய்வினைக் கோளாறுகள், உடல்நலக் குறைவு, பேய்பிடித்தல், புத்திரபாக்கியம் இல்லாமை, தொழில் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை முதலானவற்றுக்குக் குறிசொல்பவரை நாடுகின்றார்கள். குறிசொல்லும் சடங்குநிலையைச் செய்பவராகப் பூசாரிகளே காணப்படுகின்றனர். இவ்வகைச் சடங்குகள் குறித்த பதிவுகளையும் மலையக நாவல்கள் பதிவுசெய்துள்ளன. மூட்டத்தினுள்ளே நாவலில் இடம்பெறும் பேயோட்டும் சடங்குமுறை

இங்கு எடுத்துக்காட்டத்தக்கது. இந்நாவலில் இடம்பெறும் பிரதான பாத்திரங்களுள் ஒன்றான பூவாயி உடல்நலக் குறைவால் பாதிப்படைகின்றாள். அவளுக்கு ஏதோ அண்டிவிட்டது எனக் கருதி பூசாரி பூவலிங்கத்தை நாடுகிறார் அவரது தந்தையான, வேலுச்சாமி. பூசாரி பூவலிங்கம் பேயோட்டுவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றிய நாவலாசிரியரின் சித்திரிப்புகள் மலையகச் சமூகத்தில் குறிசொல்லல் முறைமை பெற்றிருக்கின்ற செல்வாக்கை எடுத்துரைக்கின்றது எனலாம் (Sathasivam, 1983). பேயோட்டும் போது உடுக்கடித்தல், தேசிக்காய் வெட்டுதல், முட்டை அளித்தல், காவு கொடுக்க சேவல் வழங்குதல், சாராயம் வழங்குதல் எனப் பேயோட்டும் சடங்கு பற்றிய விரிவான பதிவை மூட்டத்தினுள்ளே நாவலில் காணலாம்.

## பொருள்சார் பண்பாடு குறித்த பதிவுகள்

பொருள்சார் பண்பாடு என்ற வகைமையானது ஒரு குறிப்பிட்ட பொருளுக்கும் அதைப் புழங்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவை ஆராய்கிறது. இவ்வாறு மேற்கொள்ளும் ஆய்வு ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் நாகரிகம், பண்பாடு என்பவற்றை வெளிப்படுத்தும் தன்மையது. அத்துடன் ஒரு குறிப்பிட்ட பொருள் தொடர்பான கலைச்சொற்கள் அப்பொருளைப் புழங்குவோரின் மொழிவளத்தையும் சூழலியல் அறிவையும் உணர்த்தும் தன்மையன (Sivasubramaniyan, 2018). படைப்பிலக்கியங்களைப் பொருத்தமட்டில், இந்தப் பொருள்சார் பண்பாடு, குறித்த படைப்பினைச் சமுதாயத்தோடு இணைக்கும் கருவியாகவும் அமைந்து விடுகின்றது. இலக்கியப் பிரதிகளில் இடம்பெறும் பொருள்சார் பண்பாடு பற்றிய சித்திரிப்புகள் குறித்த சமுதாயத்தின் இனவரைவியல் கூறுகளை வெளிப்படுத்துவதாகவும் திகழ்கின்றன. குறிப்பாக, உணவுசார்ந்த புழங்குபொருட்கள், வீட்டு உபயோகப் புழங்குபொருட்கள், தொழிற்களம் சார்ந்த புழங்குபொருட்கள் பற்றிய பதிவுகளையும் இந்நாவல்கள் வெளிப்படுத்தியுள்ளன. உதாரணமாக, லாம்பு, பலவாக்கட்டை, மிளாரு, அலவாங்கு, மண்வெட்டி, கவ்வாத்துக்கத்தி, மட்டக்கத்தி, கொழுந்துக்கூடை, படங்கு, கொங்காணி, கொழுந்துதராசு, தராசுசமரம், கொழுந்துசாக்கு முதலான புழங்குபொருட்கள் குறிப்பிடத்தக்கவை. இப்பண்பாடு சார்ந்த விரிவான தகவல்களையும் தூரத்துப்பச்சை, மூட்டத்தினுள்ளே நாவல்கள் பதிவுசெய்துள்ளன.

## முடிவுரை

கோகிலம் சுப்பையா, புலோலியூர் க. சதாசிவம் ஆகிய இருவரும் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் இல்லை. மலையகச் சமூகத்தை உற்றுநோக்கியும் அவர்களது பண்பாட்டில் பங்குகொண்டும், அதன் பண்பாட்டு அம்சங்களை மிக நுணுக்கமாக இனங்கண்டும் அவற்றைத் தமது படைப்புகளில் பதிவுசெய்துள்ளனர். ஓர் இனவரைவியல் நாவல் என்னும் படைப்பு வெளிக்குழுவைச் சேர்ந்த உறுப்பினரோ உட்குழுவைச் சேர்ந்த உறுப்பினரோ யாரால் எழுதப்பட்டதாயினும் அந்நாவல் எந்த ஒரு குறிப்பிட்ட பண்பாட்டினை அல்லது பண்பாடுகளைத் தளமாகக் கொண்டு எழுந்ததோ அப்பண்பாடு பற்றிய முக்கியமான தகவலை அந்நாவல் வெளிப்படுத்த வேண்டும் என்பர். இந்த அம்சம் இவ்விரு நாவல்களிலும் சிறப்பிடம் பெற்றுள்ளது. மலையகச் சமுதாயம் குறித்த இனவரைவியல் பார்வையும் சமூக யதார்த்தத்தைப் படைப்பு வெளிக்குள் கொண்டுவந்த முறைமையும் அவர்களது படைப்புகள் இனவரைவியல் நாவல்களாக உருப்பெருவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. மலையக மக்கள் தென்னிந்திய கிராமப்புறங்களிலிருந்து புலம்பெயர்வதற்கான காரணங்கள், கங்காணி முறையில் கொண்டுவரப்பட்ட முறைமை, பிரயாண நிலையின் அவலம் நிறைந்த வாழ்வு, பெருந்தோட்டத் துறையின் புவியியல் சூழல், புதிய தொழில்முறைகள் அவற்றின் தனித்துவமான கட்டமைப்புக்கள், தொழிலாளர்கள் மேட்டிமைச் சக்திகளால் அடக்கி ஒடுக்கப்பட்ட முறைமை, பாத்திரங்களின் தனித்துவமான உருவாக்கம், மலையக மக்களின் சமூக வகுப்புமுறை, சாதியக் கட்டமைப்பு, வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் அதன் நிமித்தம் நடைபெறும் சடங்குமுறைகள் என்பவற்றைத் தூரத்துப்பச்சை, மூட்டத்தினுள்ளே நாவல்கள் மிகச் சிறப்பாக எடுத்தியம்புகின்றன. மலையகச் சமூகத்தின் இனவரைவியல் சார்ந்த படைப்பாக்கங்களுள் இவ்விரு நாவல்களும் தனித்துவமான இடத்தைப் பெறுகின்றன எனலாம்.

## References

Bhakthavatsala Bharathi, (2014) Elakkiya Maanitaviyal, Adaiyalam, Puthanatham, India.

Bhakthavatsala Bharathi, (2018) Panpaattu Maanitaviyal – Virivakkappatta Pathippu, Adaiyalam, Puthanatham, India.

Dhananjayan, A., (2014) Thamizhil Elakkiya Maanitaviyal, Ulakath Thamizharachi Niruvanam, Chennai, India.

Dhananjayan, A., (2015) Vilimpunilai Makkal Vazhakkarugal, New Century Book House, Chennai, India.

Gokilam Subbaiah, (2002) Thoorathup Pachai, Tamilputhakalayam, (Second Edition), Chennai, India.

Maatku, (2001) Arunthathiyar Vaalum Varalaru, Naattar Vazhakkattriyal Ayvu Maiyam, Paalayankoottai, India.

Santhirasegaran, S., (1989) Ilankai Indiyar Varalaru, Vairavan Pathippagam, Madurai, India.

Saralnadan, (2000) Malaiya Elakkiyam Thotramum Valarchiyum, Saaralveliedu, Kotagala, Sri Lanka.

Sathasivam, Ka., (1983) Mooddathinulle, Virakesari Pirasuram, Colombo, Sri Lanka.

Selvarasu, Silambu Na., (2020) Naatupura Samayam: Thonmangal – Vazhipadukal – Sadangukal (Second Edition), Kaavya Pathippagam, Chennai, India.

Sivasubramaniyan, A., (2014) Ina Varaiviyalum Thamizh Novalum, New Century Book House, Chennai, India.

Sivasubramaniyan, A., (2018) Adiththala Makkal Varalaru (Second Edition), New Century Book House, Chennai, India.

Stephen, Gna., (2017) Elakkiya Inavaraiviyal, New Century Book House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License